பக்கங்கள்:-30

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 11 | செவ்வாய்க்கிழமை | 28.11.2023 | அதிர்வு 119

## முன்னணி உறுப்பினர்கள் வவுணதீவில் நேற்று கைது



**(கனகராசா சரவணன் )**

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் மாவீரர்களுக்கு விளக்கேற்றியதமிழ்த்தேசிய மக்கள் 06▶



# மாவீரர் துயிலும் இல்லங்களில் அலைகடலெனத் திரண்ட மக்கள்

## விழிநீரால் பிரகாசித்த சுடர்கள்

**தமிழினத்தின் விடுதலைக்காகத் தம் இன்னுயிரை ஈந்த வீரமறவர்களுக்கு - மாவீரர்களுக்கு - உயிர்க்கொடையாளர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் நேற்றுத் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் பேரெழுச்சியுடன் உணர்வுபூர்வாக நடைபெற்றன. தாயகத்தில் உள்ள துயிலும் இல்லங்கள் உறவுகளின் கண்ணீரால் நனைந்தன.** 06▶



## கொடிகளை அறுத்து எறிந்த பொலிஸ் தரவை துயிலும் இல்லத்தில் அராஜகம்



**(மட்டக்களப்பு நிருபர்கள்)**

மட்டக்களப்பு – தரவை மாவீரர் துயிலும் இல்லத்துக்குள் புகுந்து பொலிஸார் அராஜகம் புரிந்துள்ளனர்.

மாவீரர்களை நினைவுகூர்ந்து வடக்கு – கிழக்கில் அஞ்சலி நிகழ்வுகள் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டன. இந்தநிலையில், மட்டக்களப்பு – தரவை மாவீரர் துயிலும் 06▶




நீதிமன்றத் தடை உத்தரவுகளை விழுந்தடித்து வாங்கி, தமிழ் அரசியல் பிரமுகர்களிடம் அவற்றைக் கையளிப்பதில் முனைப்பாக நிற்கும் ஸ்ரீலங்கா பொலிஸ், அந்தத் தடை உத்தரவு–களை மீறி, ஆர்ப்பாட்டமோ, எதிர்ப்போ செய்வோருக்கு எதிராக, விவகாரம் முடிந்த பின்னரும், வழக்குப் போட்டு, நீதிமன்றத்திற்கு இழுத்தடித்து, நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றச்சாட்டு என்று குற்றப் பத்திரமும் தாக்கல் 06▶

# வட்டுக்கோட்டை இளைஞர் கொலை: நேற்றும் ஐந்து சாட்சியங்கள் பதிவு!

## டிசம்பர் முதலாம் திகதி அடையாள அணிவகுப்பு

(எஸ்.நிதர்ஷன்)

வட்டுக்கோட்டை இளைஞர் நாகராசா அலெக்ஸ் படுகொலை வழக்கில் அவரின் சகோதரன், தந்தை மற்றும் அலெக்ஸைப் பொலிஸார் கைது செய்யும் போது, நேரில் கண்ட இளைஞர் உள்ளிட்ட ஐவர் யாழ். நீதவான் நீதிமன்றில் நேற்று தோன்றி தமது சாட்சியங்களைப் பதிவு செய்தனர்.

சாட்சிப் பதிவுகளை அடுத்து வழக்கை எதிர்வரும்முதலாம்திகதிக்குஒத்திவைத்த நீதிவான், அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்கும் உத்தரவிட்டார்.

அதேவேளை, பாதிக்கப்பட்டவர்கள் நலன் சார்ந்து மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள், "வழக்கின் மூன்றாவது சாட்சியத்தின் அடிப்படையில் ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் நால்வரை மாத்திரமே கைது செய்துள்ளனர். ஏன் மற்றையவரைக் கைது செய்யவில்லை?" - என்று மன்றில் கேள்வி எழுப்பினர்.

அது தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து மற்றைய நபரையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

**பின்னணி**

வட்டுக்கோட்டை பொலிஸாரால் சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞர் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளான நிலையில் கடந்த 19ஆம் திகதி யாழ். சிறைச்சாலையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப் படும்போது உயிரிழந்துள்ளார்.

இளைஞர் உயிரிழந்தமை, யாழ். நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் என்பதால் கொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ். நீதவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றன.

உயிரிழந்த இளைஞருடன் கைதான



இளைஞரின் சாட்சியத்தின் அடிப்படையில் 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு கடந்த சனிக்கிழமை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப் பட்டதை அடுத்து எதிர்வரும் 4ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

அந்த நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும் பாதுகாப்புக் கருதி அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரொஷான் வகித்த அமைச்சுப் பதவிகளுக்கு ஹரின், பவித்ராவை நியமித்தார் ஜனாதிபதி





ரொஷான் ரணசிங்க அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக ஹரின் பெர்னாண்டோ நியமிக்கப் பட்டுள்ளார்.

நீர்ப்பாசன அமைச்சராகப் பவித்ரா வன்னியாராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

ரொஷான் ரணசிங்கவை அவர் வகித்த அனைத்து அமைச்சுப் பதவிகளில் இருந்தும் நீக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நடவடிக்கை எடுத்திருந்தார்.

விளையாட்டு, இளைஞர் விவகாரங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சுப் பதவிகளில் இருந்து ரொஷான் ரணசிங்கவை நீக்குவதற்கான கடிதம், நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது வழங்கப்பட்டிருந்தது.

# பிரிட்டனில் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு நேற்று அஞ்சலி!





பிரித்தானியா வாழ் தமிழ் மக்களால் மாவீரர்கள் மற்றும் யுத்தத்தில் உயிர்த்தவர்களுக்கு உணர்வெழுச்சியுடன் நேற்று அஞ்சலி செலுத்தப் பட்டது.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு கடந்த ஏழு நாட்களாக இலங்கையில் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மற்றும் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் சர்வதேச நாடுகளிலும் சிறப்பு நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்று வந்தன.

நேற்று பிரித்தானியாவின் இலண்டன் நகரில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் மாவீரர்களின் உறவினர்கள் மற்றும் பெருந்திரளான தமிழ் மக்கள் கலந்துகொண்டு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தியிருந்தனர்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT
A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# RUHBINS HOSPITAL (PVT) LTD.

NO. 160, POINT PEDRO ROAD, NELLIYADY, JAFFNA.

## NOVEMBER 14

# WORLD DIABETES DAY

# DIABETES IS A SILENT KILLER

| | | |
|---|---|---|
| Approximately 463 M + From the World Population | Over 2 M Sri Lankans are Diabetes | Every 6 seconds One person dies due to Diabetes |



## Access to Diabetes Care

### WELLNESS PACKAGE

- HBA1C
- Fasing/ Random Blood Sugar
- Total Cholesterol
- Creatinine & eGFR
- Blood Pressure
- BMI Assessment
- Consultation with Medical Officer
- Advice on Lifestyle Modification

**Special Offer**

**Rs. 5,500/-**

Offer valid till Dec 14th

Hotline: +94772486642

உங்கள் அன்பிற்குரியவரை நீரிழிவு பரிசோதனை செய்துகோள்ள சொல்லுங்கள், அது அவர்களின் உயிரை பாதுகாக்கும்.

Ruhbins Hospital

No. 160, Pointpedro Road, Nelliyadi, Jaffna

# நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தினால் கருத்து வெளியிடும் சுதந்திரம் பாதிப்பு

## கொழும்பு பேராயர் தெரிவிப்பு



**உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தினூடாக மக்களின் கருத்து வெளியிடும் உரிமை, உண்மையை கண்டறியும் உரிமை என்பன மட்டுப்படுத்தப்படுகின்றன என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

நாட்டின் ஒற்றையாட்சியை நடாத்திச்செல்லும் இவ்வாறான முயற்சிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான சிக்னீஸ் விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டபோதே கொழும்பு பேராயர் இதனை கூறினார்.

நாட்டிற்கு சிந்தனைப் புரட்சி தேவைப்படுவதாகவும் அனைத்து இன, மத மக்களையும் சமத்துவத்துடன் நடத்தும் சட்டப் புரட்சியும் நாட்டில் தற்போது ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பௌதீக வளங்களை பாதுகாத்து சர்வதேசத்தின் பக்கத்திலிருந்து அனைவரும் பயனடையக்கூடிய தன்னிறைவுப் பொருளாதாரத்தை நோக்கி பயணிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இதற்காக நாட்டை இதுவரை ஆட்சி செய்த பாரம்பரிய அரசியல் கட்சிகளை நிராகரிக்க வேண்டிய தருணம் உருவாகியுள்ளது என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சுட்டிக்காட்டியுள்ளார்.

சமூக ஊடகங்களை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும் எனும் போர்வையில் மக்கள் கருத்து வெளியிடுதல், உண்மையை கண்டறியும் உரிமைகள் மட்டுப்படுத்தப்படுவதாக இந்த சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளமை தெளிவாகின்றது என அவர் குறிப்பிட்டார்.

நாட்டை சர்வாதிகாரத்திற்கு இட்டுச்செல்லும் இவ்வாறான முயற்சிகளை முறியடிக்க வேண்டியது அரசியல், மக்கள் சார்பான ஊடகங்களின் கடமையாகும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



# கிரிக்கெட் இடைக்கால நிர்வாக சபைக்கு எதிரான மனுவின் மீதான மேலதிக பரிசீலனை ஒத்திவைப்பு

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் நியமித்த கிரிக்கெட் இடைக் கால நிர்வாக சபைக்கு எதிராக இலங்கை கிரிக்கெட்டின் தலைவர் ஷம்மி சில்வா, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு மீதான மேல திக பரிசீலனை இன்று வரை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதி மன்ற நீதிபதிகளான சோபித்த ராஜ கருணா, டி.என்.சமரகோன் ஆகி யோர் அங்கம் வகித்த நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுவில் பிரதிவாதிகளாக குறிப் பிடப்பட்டுள்ள இலங்கைக் கிரிக்கெட் இடைக்கால நிர்வாக சபையின் தலைவர் அர்ஜுன ரணதுங்க உள்ளிட்ட உறுப்பி னர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கமளித்தார்.

தொடர்ந்து மேலதிக பரிசீலனைக் காக மனு இன்று வரை ஒத்திவைக்கப்பட் டது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்து, நீண்ட 'திருவிழா' நடத்துவார்கள்.

இதே தவறை – குற்றத்தை – பொலிஸே செய்தால் என்ன செய்வது என்று நேற்று இரவு தொலைபேசி அழைப்பு எடுத்து என்னைக்கு கேட்டார் – கேட்டார் என்பதை விட துளைத்தெடுத்தார் என்பதே பொருத் தம் – அந்த நண்பர்.

அவர் இப்போதும் மூதூர்வாசி. நீண்ட கால நண்பர். கொஞ்சம் சட்டமும் புரிந் தவர்.

"அண்மையில் மட்டக்களப்புக்கு ஜனாதிபதி ரணில் வந்த போது நீதிமன் றத் தடை உத்தரவை மீறி அவருக்கு எதி ராக ஆர்ப்பாட்டம் செய்தோர் என்று கொஞ் சம் தமிழ் பிரமுகர்களுக்கு எதிராக இப் போது பொலிஸார் வழக்குப் போட்டு தொல்லை பண்ணுகின்றனர். தெரி யுமா?" – என்று கேட்டார் அவர்.

"ஓம். தெரியும்" – என்று கூறி அந்த விவ ரங்களையும் அவருக்குச் சொன்னேன்.

"சரி. இதே தவறை பொலிஸ் செய்தால் என்ன செய்வது?" – என்று திரும்பிக் கேட்டார் அவர்.

எனக்கு விளங்கவில்லை. அவர் விளங் கப்படுத்தத் தொடங்கினார்.

"மாவீரர் தின நினைவேந்தல் தொடர்பான வழக்கு மூதூர் நீதிமன் றத்தில் இன்று (நேற்று) நடந்தது. சட்டத் தரணி சுமந்திரன் வந்திருந்தார். அத னால் நானும் பார்க்கப் போயிருந்தேன். அந்த நினைவேந்தலுக்குத் தான் தடை ஏதும் வழங்கவில்லை என்றார் நீதிவான். பொதுப் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றை மீறாமல் பேணி நினை வேந்தலை நடத்தலாம் என்றுதான் தாம் உத்தரவிட்டிருக்கின்றார் என்று திரும் பத் திரும்பக் கூறி, நிலைமையைச் சமாளித்தார் நீதிவான். அப்படியானால் நினைவேந்தலை நடத்தலாம் என்று திட்டவட்டமாக உத்தரவு ஒன்றை எழுத் தில் கொடுங்கள் என்று வற்புறுத்தினார் சுமந்திரன். 'இல்லை, இல்லை. பொதுப் பாதுகாப்புக்கும் சுகாதார பாதுகாப்புக் கும் குந்தகம் ஏற்படுத்தக் கூடாது என்று மட்டும்தான் உத்தரவு கொடுத்து இருக்கி றேன். அது தெளிவான கட்டளை' என்று கூறி நீதிவான் சமாளித்துவிட்டார். ஆனால் மாலையில் பொதுமக்கள் நினை வேந்துவதற்காக ஒன்று கூட பொலிஸார் அனுமதிக்கவில்லை. நீதிமன்ற உத்த ரவை பொலிஸார் மீறி நடந்ததற்கு யாரிடம், யார் முறையிடுவது?" என்று கேட்டார் அந்த நண்பர்.

"இது பொது மக்களுக்கு பாதிப்பு என்பதிலும் பார்க்க, சம்பந்தப்பட்ட நீதி வானுக்குதான் இழுக்கு, அவமானம்" – என்றேன் நான்.

அந்த நீதிவான் ஒரு பெண்மணி என்றார் என் நண்பர்.

எது, எப்படியோ, எல்லாருமாகச் சேர்ந்து பொதுமக்களின் ஒன்றுகூடி நினைவேந்தும் உரிமைக்கு ஆப்படித்தி விட்டனர். மனசாட்சி இருந்தால் சம்பந்தப் பட்டோருக்கு இது மனதை அரிக்கும். அவ்வளவுதான்...!

## முன்னணி உறுப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர், அவரது

மகன் மற்றும் சிவப்பு, மஞ்சள் கொடி களை வாகனத்தில் எடுத்துச் சென்ற நபர் ஆகியோரை வவுணதீவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யினர் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தை அலங்கரிப்பதற்காக சிவப்பு, மஞ்சள் கொடிகளை மட்டக்களப்பு நக ரில் இருந்து பட்டா ரக வாகனத்தில் நேற்று மாலை எடுத்துச் சென்ற நிலை யில் அந்தப் பகுதியில் நடமாடும் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் குறித்த வாகனத்தை நிறுத் திச் சோதனையிட்டனர். இதன்போது அங்கு சிவப்பு, மஞ்சள் கொடிகள் மற்றும் கம்பிகள் இருப்பதைக் கண்டு வாகன சாரதியைக் கைது செய்ததுடன் வாக னத்தையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

இந்தநிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் குககுலராஜா (குகன்), அவரது மகன் ஆகியேர் பொலிஸ் நிலையம் சென்று கைது செய்யப்பட்ட சாரதியைப் பார்த்துவிட்டு மாலை 6.05 மணியளவில் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் வீதியில் மாவீரர்களுக்கு விளக் கேற்றினர். இதன்போது அவர்கள் இரு வரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை வவுணதீவு பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

கைதான மூவரையும் இன்று நீதி மன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது என்று வவுணதீவு பொலி ஸார் தெரிவித்தனர்.

## மாவீரர் துயிலும்...

(முதலாம் பக்ககத் தொடர்ச்சி...)

வடக்கு – கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வைக் குழப்பும் வகையில் கடந்த ஒரு வாரமாகப் பொலிஸார் செயற்பட்ட போதி லும் மக்கள் இவற்றைக் கண்டு அஞ்சா மல் வீரமறவர்களுக்குத் துணிவுடன் துயிலும் இல்லங்களுக்குச் சென்று சுடரேற்றினர்.

வடக்கு – கிழக்கில் உள்ள நீதி மன்றங்களும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுக்கு அனுமதி வழங்கியிருந்தன. நினைவேந்தல் நிகழ்வுக்குத் தடை கோரி பொலிஸார் தாக்கல் செய்திருந்த மனுக்களை நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்திருந்தன.

தாயகத்தில் உள்ள அனைத்துத் துயி லும் இல்லங்களிலும் நேற்று மாலை சமநேரத்தில் சுடர்கள் கொழுந்து விட்டு எரிந்தன. அந்த ஒளி வெள்ளத்தின் மத் தியில் மக்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுது தமது உறவுகளை நினைவுகூர்ந் தனர்.

மாவீரர் துயிலும் இல்லங்கள், நினை வுத் தூபிகள், பொது இடங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் என்பவற்றில் நேற்று மாவீரர் நாள் உணர்வுபூர்வமா கக் கடைப்பிடிக்கப்பட்டது.

சிவப்பு, மஞ்சள் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தன. மாவீரர் எழுச்சிக் கீதங்கள் நேற்றுக் காலையிலிருந்து ஒலிக்கவி டப்பட்டிருந்தன.

நேற்று மாலை 6.05 இற்கு நினை வொலி எழுப்பப்பட்டு, 6.06 இற்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, 6.07 இற்கு ஈகச்சுடரேற்றல் நிகழ்வு நடை பெற்றது. மாவீரர்கள் நினைவான ஈகச் சுடர்கள் கொழுந்துவிட்டு எரிந்தன. அத னைத் தொடர்ந்து, மாவீரர் துயிலும் இல்லப் பாடல் ஒலிக்கவிடப்பட்டது. பாடல் இசைக்கப்பட்டபோது, மாவீரர்களின் பெற்றோர், சகோதரர்கள் மற்றும் உறவி னர்கள் உயிர்நீத்த தமது சொந்தங்களை நினைத்துக் கதறி அழுதனர். அந்தக் காட்சி அங்கு கூடியிருந்தவர்களை நிலை குலைய வைத்தது.

இதேவேளை, புலம்பெயர் தேசங்களி லும் மாவீரர் நாள் நிகழ்வுகள் நேற்று பேரெழுச்சியுடன் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

## கொடிகளை அறுத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இல்லத்தின் அஞ்சலி நிகழ்வின் இடையே உட்புகுந்த பொலிஸார் அஞ்சலி நிகழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தினர்.

இதன்போது அங்கு ஒன்றுதிரண் டிருந்த மக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், செ.கஜேந்திரன் உள்ளிட்டோருக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

துயிலுல் இல்லத்துக்குள் சப்பாத்துக் கால்களுடன் வந்திருந்த பொலிஸார், அங்கு கட்டப்பட்ட கொடிகளை அறுத்து எறிந்ததுடன், தீபங்களையும் பிடுங்கி எறிந்தனர்.

பொலிஸாரின் இந்த அராஜகச் செயற்பாட்டை எதிர்த்து மக்கள் கூக்குர லிட்டபோதும், நிகழ்வைக் குழப்பும் நட வடிக்கையில் பொலிஸார் ஈடுபட்ட னர்.

எனினும், பொலிஸாரின் கடும் கெடுபிடி களுக்கு மத்தியிலும் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நினைவேந்தலும் நீதிமன்றங்களும்

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தங்கள் உறவுகளை தமிழர் தாயகம் நேற்று உணர்வுபூர்வமாக ஒன்றிணைந்து அஞ்சலித்தது.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடை செய்ய வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்று குதித்த பொலிஸ் மேலதிகாரிகளையும், நாடாளுமன்றத்திலும் வெளியிலும் இனக்குரோத அடிப்படையில் இந்த நினைவேந்தல்களை கரித்துக் கொட்டிய சரத் வீரசேகர போன்ற பேரினவாத வெறிப்போக்கு அரசியல்வாதிகளையும், தமிழர் தாயகத்தில் சோகமே ததும்ப இடம்பெற்ற இந்த மாவீரர் தின நிகழ்வுகளை ஒரு தடவை நேரில் கூட்டி வந்து காட்டி இருக்கலாம்.

பிரிவாற்றாண்மையோடு இடம்பெறும் இந்த நினைவேந்தல்களின் உணர்வுபூர்வமான அடிப்படைகளை அவர்கள் நேரில் கண்டிருந்தால், அவர்களின் மனதில் ஆழமாக செழும்பேறிப் போய் கிடக்கும் பேரினவாத வெறியை அந்த உருக்கமான நினைவேந்தல்கள் சில சமயங்களில் கரைத்திருக்குமோ, எனவோ...!

எது, எப்படி என்றாலும் யுத்தத்தில் உயிரிழந்த தங்களின் உறவுகளை மக்கள் ஒன்றித்து, ஒன்று கூடி, ஒரே நாளில் நினைவேந்துவதற்கான அவர்களின் உரித்தை - உரிமையை - வடக்குக் கிழக்கில் உள்ள பெரும்பாலும் அனைத்து நீதிமன்றங்களும் ஒரே முறையில் சட்டத்தை பிரதிபலித்து, வியாக்கியானம் செய்து, அதற்கான அனுமதியை அங்கீகரித்து, உறுதி செய்து, வழங்கியிருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது.

இந்தத் தடவை மாவீரர் நாளையொட்டி கட்டவிழுந்த முக்கிய விடயமாக இதனைப் பார்க்க முடியும்.

இனி, திலீபன் நினைவு தினம், மாவீரர் நாள் போன்ற விடயங்களை ஒட்டி இதே மாதிரியான ஒரு கொள்கை போக்கை - சட்ட வியாக்கியானத்தை - நீதிமன்றங்கள் பேணுவது தான் ஒழுங்கு முறையாக இருக்கும்.

நாட்டை ஆளும் அரசாங்கங்கள், ஆட்சித் தலைவர்கள் மாறலாம். ஆனால் நாட்டின் சட்டங்கள் சட்ட ரீதியாக மாற்றப்படாத வரை, ஒரே சட்டங்கள்தான், ஒரே மாதிரியாகத்தான் எப்போதும் அவை வியாக்கியானப்படுத்தப்பட வேண்டும். காலம் மாற, நாடாளுமன்றத்தின் மூலம் மாற்றப்படாத சட்டங்கள் தொடர்பில் நீதிமன்றங்கள் தம்பாட்டில் வியாக்கியானங்களை மாற்றக்கூடாது. மாற்றினால் அவை நீதிமன்றங்கள் அல்ல. அநீதிமன்றங்களாகி விடும்.

மாவீரர் தின நினைவேந்தல் தொடர்பாக வடக்குக் கிழக்கில் உள்ள நீதிமன்றங்கள் இம்முறை பெரும்பாலும் ஒரே மாதிரியாக சட்டத்தை வியாக்கியானம் செய்து, ஒத்திசைவான தீர்ப்புக்களையும், கட்டளைகளையும் வழங்கி இருக்கின்றன. இவை தொடர்பான சட்டங்கள் மாறாத நிலையில், ஆட்சித் தரப்புகள் - அதிகார மையங்கள் - மாறினாலும், நீதிமன்றங்கள் தங்கள் நிலைப்பாட்டை எதிர்காலத்தில் புதிது புதிதாக மாற்றிக் கொள்ளக் கூடாது. புதிய சட்ட மாற்றங்கள் ஏதும் வராத நிலையில், கொழும்பு ஆட்சித் தலைமையின் போக்கில் மாற்றம் வந்தாலும், நினைவேந்தல் தொடர்பான தமது உத்தரவுகளை இம்முறை வழங்கியமைக்கு மாறான முறையில் சட்டத்தை வியாக்கியானப்படுத்தி, தலைகீழான கட்டளைகளையும் உத்தரவுகளையும் நீதிமன்றங்கள் எதிர்காலத்தில் வழங்கத் தொடங்கினால் அந்த நீதிமன்றங்கள் மீதான மக்களின் நம்பிக்கை அற்றுப் போய்விடும்.

கிழக்கில் சில நீதிமன்றங்கள் தாம் வழங்கிய உத்தரவுகள் தெளிவானவை, அவற்றின் படி மக்கள் நினைவேந்த அனுமதி உண்டு என நீதிமன்றத்தில் ஒரு வியாக்கியானம் கூற, பொலிஸாரோ களத்தில் அந்த உத்தரவுக்கு வேறு வியாக்கியானம் கூறி, நினைவேந்த மக்களை அனுமதிக்காமல் தடுத்து விட்டனர். இது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி மட்டுமல்ல, சம்பந்தப்பட்ட நீதிவானுக்குக் கிடைக்கப்பெற்ற அவமானமும் கூட.

உரிய நீதிமன்றங்கள் இவற்றைப் புரிந்து கொண்டால் சரி.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023



"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப் பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை."

**- ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)**

# புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதி

அம்பாந்தோட்டையில் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

சீனாவின் சினோபெக் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்வதற்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அம்பாந்தோட்டையில் சினோபெக் நிறுவனத்தின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை நிறுவும் உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொள்வதற்கான யோசனை நேற்று அமைச்சரவையில் முன்வைக்கப்படிருந்தது.



# ரொஷான் பதவி நீக்கம்; சஜித் கடும் அதிருப்தி!




விளையாட்டுத்துறை அமைச்சராகச் செயற்பட்ட ரொஷான் ரணசிங்க அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

"மக்கள் ஆணையின்றி ஆட்சிக்கு வந்த தற்போதைய ஜனாதிபதி, நாட்டின் சட்டத்தைக் கூட மீறி விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் பணிகளுக்கு இடையூறு விளைவித்து, ஊழல் நிறைந்த கிரிக்கெட் நிர்வாகத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அனைத்து பணிகளையும் முடக்கி, அவரை விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவியில் இருந்தும், ஏனைய அமைச்சுப் பதவிகளில் இருந்தும் நீக்க எடுத்த முட்டாள்தனமான முடிவை ஜனநாயகத்தை மதிக்கும் எதிர்க்கட்சி என்ற வகையில் எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம்.

நாட்டில் உள்ள 220 இலட்சம் மக்களால் விரும்பப்படும் கிரிக்கெட் விளையாட்டு, தற்போது மிகவும் ஊழல் நிறைந்ததாக மாறியுள்ளது. நாட்டை வங்குரோத்தாக்கிய ராஜபக்ஷக்களை விரட்டியடித்த பின்னர், இவ்வாறான ஊழல் ஆட்சியை மக்கள் எதிர்பார்க்கவில்லை.

குரோனி முதலாலித்துவம், நட்பு வட்டார முதலாளித்துவம் கிரிக்கெட் நிர்வாகத்தின் மீது படையெடுத்து மக்கள் நேசித்த கிரிக்கெட் விளையாட்டை அழித்துவிட்டது. இந்த நட்பு வட்டார வாதத்துக்கு எதிராக அச்சமின்றிப் போராடிய தற்போதைய விளையாட்டுத்துறை அமைச்சரின் பணிகளில் ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை தலையிட்டு இடையூறு செய்தமை முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும்.

நியாயமான காரணமின்றி ஊழல்வாதிகளுக்கு எதிராக போராடிய விளையாட்டுத்துறை அமைச்சரை ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்கியதன் பின்னணியில் மறை கரம் இருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது. தற்போது ரொஷான் ரணசிங்கவின் உயிருக்கு அச்சுறுத்தல் வரலாம் என்ற படியால் கட்சி பேதமின்றி நாம் அனைவரும் அவருக்காக முன் நிற்போம்." - என்றுள்ளது.

# கிளிநொச்சியே திரண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி!

## கனகபுரம் துயிலும் இல்லத்தில் வணக்க நிகழ்வு






கிளிநொச்சி – கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.


நேற்று மாலை 6.07 மணியளவில் பிரதான சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

மூன்று மாவீரர்களின் சகோதரியும் தமிழீழ மாவீரர் பணிமனையின் பொறுப்பாளர் பொன். தியாகத்தின் புதல்வியுமாகிய அனந்தி பிரதான சுடரை ஏற்றி வைத்தார்.

பெருந்திரளான மக்கள் திரண்டு மாவீரர்களாகிப்போன தமது உறவுகளை நினைந்து கண்ணீர் மல்கச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.







# யாழ். பல்கலையில் மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நேற்று திங்கட்கிழமை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத் தூபியில் மாலை 6.05 மணியளவில் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன்போது மாவீரர்கள் நினைவாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. மூன்று மாவீரர்களின் தயார் ஒருவர் ஈகைச்சுடரை ஏற்றிவைத்தார்.














# வவுனியா பல்கலையில் மாவீரர் நாள்




வவுனியா பல்கலைக்கழகத்தில் மாவீரர் நினைவு நாள் உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

மாவீரர் நாளான இன்று (27.11) மாலை மாணவர்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த முற்பட்ட வேளை, பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தினர் மாவீரர் நினைவேந்தலை செய்ய அனுமதிக்கவில்லை.

இருப்பினும், மாணவர்கள் உணர்வெழுச்சியுடன் பொதுச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

# கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில்




யாழ்ப்பாணம் - கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

அகவணக்கத்தைத் தொடர்ந்து ஈகைச் சுடரை மாவீரர்களான கப்டன் ரசியன், மேஜர் ரெஸ்ரார்,மேஜர் வண்ணன் ஆகியோரின் தாயாரும் மற்றும் மாவீரர் குமரர் மற்றும் சந்திரன் ஆகியோரின் சகோதரியும் ஏற்றி நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் உறவுகள் மற்றும் பொதுமக்களால் பொதுச்சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டன.

மாவீரர்களின் பெற்றோர், சகோதரர்கள்,உறவுகள், சமூக ஆர்வலர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.














# நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன் அஞ்சலி



யாழ்ப்பாணம் நல்லூரில், தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவு மண்டபத்தில், மாவீரர் நாளான நேற்றைய தினம் திங்கட்கிழமை உணவெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள் என பலரும் கலந்து கொண்டு தாயக விடுதலைக்காக உயிர் நீர்த்த மறவர்களுக்கு சுடரேற்றி மலர் தூவி கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.













# வடமராட்சி எள்ளங்குளத்தில்











யாழ்ப்பாணம் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக மாவீரர் நாள் நேற்று உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில் துயிலும் இல்லத்திற்கு அருகில் உள்ள காணி ஒன்றில் அஞ்சலி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பிரதான ஈகைச் சுடரினை கடற்கரும்புலி மாவீரர் தமிழினியின் தந்தையார் முத்துலிங்கம் சிவப்பிரகாசம் ஏற்றிவைத்தார்.

அதனை தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தாயக விடுதலைக்காக உயிர் நீர்த்த ஏனையவர்களுக்கு சுடரேற்றி மலர் தூவி கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.






# சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில்



யாழ்ப்பாணம், தீவகம், சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்திப்பட்டது.

ஆரம்பத்தின் மாவீரர்களின் பெற்றோர், மற்றும் உறவினர்கள் சாட்டி மாதா தேவாலயத்தில் இருந்து அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து பொது ஈகைச்சுடர் முன்னாள் போராளியும், இரண்டு மாவீரர்களின் தந்தையுமான வி.கந்தசுவாமியினால் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களுக்கு சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், முன்னாள் போராளிகள், அரசில்வாதிகள், பொது மக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்.














# கிளிநொச்சி கனகபுரத்தில்






















# காரைநகரிலும் நேற்று அஞ்சலி

காரைநகரிலும் நேற்றைய தினம் உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இலங்கை தமிழரசு கட்சியின் காரைநகர் மூலக்கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் மாவீரர் பெற்றோரினால் பொதுச்சுடரேற்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதன்பொழுது மாவீரர் பெற்றோர்கள், பொதுமக்கள், பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை நேற்றுக் காலை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் இந்த நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கு ஊர்காவற்துறை பொலிஸார் தடை கோரிய நிலையில் நீதிமன்று நிராகரித்து இந்த நிகழ்வுகளை நடாத்த அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா ஈச்சங்குளத்தில்



வவுனியாவில் பிரதான மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள ஈச்சங்குளம் பகுதியில் 561 ஆவது இராணுவ தலைமையகம் அமைந்திருப்பதால் அதற்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் நினைவேந்தல்கள் நேற்று இடம்பெற்றன.

இதன் போது மணி ஒலிக்கப்பட்டு, ஈச்சங்குளம் துயிலும் இல்லத்தின் பிரதான ஈகைச்சுடர் மேஜர் உமாசங்கர் மற்றும் கப்டன் கஜலக்சுமி ஆகியோரின் தாயார் வள்ளிப்பிள்ளையால் ஏற்றி வைக்கப்பட்டது.

இதனையடுத்து நினைவேந்தலில் கலந்து கொண்ட மாவீரர்களின் பெற்றோர்களால் சுடர் ஏற்றி நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

கண்ணீர் மல்க, மலர் தூவி, சுடரேற்றி உணர்வு பூர்வமாக உயிரிழந்த வீரர்களுக்கு தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர். இதில் பல ஆயிரக்கணக்கான பெற்றோர்கள், உறவினர்கள் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.













# ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில்



**(மன்னார் நிருபர்)**

மாவீரர் தினத்தையொட்டி மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிவப்பு,மஞ்சள் கொடிகள் பறக்க விட்டு உணர்வு பூர்வமாக மாவீரர் நினைவு தினம் நேற்று திங்கட்கிழமை மாலை நினைவு கூரப்பட்டது.

தமிழ் தேசிய விடுதலைக்காக தனது மகனை கரும்புலியாக வழங்கிய தந்தை பொதுச் சுடரை ஏற்றி எழுச்சி பூர்வமாக நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார் .

ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் உறவினர்கள் பெருந்திரளான மக்கள், அருட் தந்தையர்கள், அருட்சகோதரிகள் என ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று திரண்டு கண்ணீர் மல்க உணர்வு பூர்வமாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அதே நேரம் மாவீரர் துயிலும் இல்லங்களில் பொலிஸார் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடு பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






















# மன்னார் மடு பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில்

(மன்னார் நிருபர்)

மன்னார் பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று ஒன்று திரண்ட மக்கள் சுடரேற்றி உணர்வு பூர்வமாக தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்..

பொதுச் சுடர் ஏற்றப்பட்ட பின் மாவீரர்களின் உறவுகள் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இதன் போது மாவீரர்களின் உறவுகள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அரசியல் பிரமுகர்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.



















# கோப்பாயில் நினைவேந்தல்



யாழ்ப்பாணம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக,,மாவீரர் நாளான நேற்றைய தினம் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில் துயிலும் இல்லத்திற்கு முன்பாக உள்ள காணி ஒன்றில் அஞ்சலி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.















# முல்லைத்தீவு இரட்டைவாய்க்கால் மாவீரர்கள் துயிலும் இல்லத்தில்

முல்லைத்தீவு இரட்டைவாய்க்கால் மாவீரர் துயிலும் இல்லத்தில் 2023 தமிழ் தேசிய மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக நேற்று இடம் பெற்றது.

பொதுச்சுடரினை இரண்டு மாவீரனின் தந்தை தனபாலசிங்கம் ஏற்றி வைக்க, ஏனைய உறவுகளுக்கு அவர்களது உறவுகள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.



# விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில்







விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் 2023 தமிழ் தேசிய மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக இடம் பெற்றது.

பொதுச்சுடரினை மூன்று மாவீரரின் தாயான ஜோசெப் முனியம்மா ஏற்றி வைக்க ஏனைய உறவுகளுக்கு அவர்களது உறவுகள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

















# வாகரை கண்டலடியில் நினைவேந்தல்



(பழுவூரான்)

வீர மறவர்களை நினைவு கூரும் வகையில் வாகரை கண்டலடியில் உறவுகள் கதறியழ நேற்று மாவீரர் தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது மாலை 6.05 ற்கு நினைவொலி எழுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து 6.06 இற்கு உயிர்நீத்த மாவீரர்களுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, 6.07 இற்கு ஈகைச் சுடரேற்றப்பட்டது.

இவ் மாவீரர் நினைவு கூரலில் பாதுகாப்புத் தரப்பினரது தடைகளையும் தாண்டி பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.







# வல்வெட்டித்துறை கம்பர்மலையில்



வல்வெட்டித்துறை கம்பர் மலையில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரர் சங்கரது நினைவாலயம் முன்பாக மாவீரர் நினைவேந்தல் இடம்பெற்றது.

மாவீரர்களின் உறவுகள் கலந்துகொண்டு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தினர்.











# முல்லைத்தீவு வன்னிவிளாங்குளத்தில்

முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் 2023 தமிழ் தேசிய மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக இடம் பெற்றது

பொதுச்சுடரினை அனுராதபுரம் விமானப்படை தாக்குதலில் வீர காவியமான கரும்புலி மாவீரர் லெப் கேணல் மதியழகியின் தந்தை ரட்ணசாமி ஏற்றி வைதார். அதைத் தொடர்ந்து ஏனையோருக்கு அவர்களது உறவுகள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.














# முல்லைத்தீவு கடற்கரையில்

முல்லைதீவு கடற்கரையில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், முன்னாள் போராளிகள், பொது மக்கள் என பெருந்திரளானவர்கள் உணர்வு பூர்வமாக ஒன்று திரண்டு உயரிய இலட்சியத்திற்காக தங்களின் இன்னுயிர்களை தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் முல்லைத்தீவு கடற்கரையில் மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு, அக வணக்கம் செலுத்தப்பட்டு பின்னர் பிரதான பொதுச் சுடரை கடற்கரும்புலி மேஜர் நிதர்சன் அவர்களின் தாயார் ஏற்றி வைக்க ஏனைய சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் ஏற்றி வைக்கப்பட்டது.

தொடர்ந்து துயிலுமில்ல பாடலான தாயக கனவுடன் சாவினைத் தழுவிய சந்தன பேழைகளே எனும் பாடல் ஒலிபரப்பாகியது. இதன் போது மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் மிகவும் அமைதியாக கண்ணீர் மல்க மாவீரர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

குறித்த அஞ்சலி நிகழ்வில் பெருந்திரளான பொதுமக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்து கொண்டிருந்தார்கள்.


















# முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில்





முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் 2023 தமிழ் தேசிய மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக இடம் பெற்றது.

பொதுச்சுடரினை இரண்டு மாவீரர்களின் தந்தை சின்னத்துரை சாந்தலிங்கம் ஏற்றி வைக்க ஏனையோருக்கு அவர்களது உறவுகள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.





# தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில்











முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் 2023 தமிழ் தேசிய மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக இடம் பெற்றது.

பொதுச்சுடரினை இரண்டு மாவீரரின் பெற்றோர் ஏற்றி வைக்க ஏனைய உறவுகளுக்கு அவர்களது உறவுகள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்



# இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்லத்தில்

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இரணைப்பாலை பகுதியில் விதைக்கப்பட்ட மாவீரர்களின் நினைவாக அதே இடத்தில் இம்முறையும் மாவீரர் நாள் நிகழ்வுகள் சிறப்பாக நினைவுகூரப்பட்டுள்ளது.

பொலீசாரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்லத்தில் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, வளாகத்திற்கான வளைவு பதாதையில் மாவீரர் என்ற பெயர் பதிக்ககூடாது என நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவிற்க அமைய அங்கு மாவீரர் துயிலும் இல்ல பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இரணைப்பாலை துயிலும் இல்லத்தில் தங்கள் பிள்ளைகளை நினைவுகூர பெருமளவான மக்கள் நேற்று மாலை ஒன்று திரண்டார்கள்.

பொதுச்சுடரினை இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்லத்தில் முதல் விதைத்த மாவீரர் இசைஞானி அவர்களின் தாயார் ஏற்றிவைக்க தொடர்ந்து சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட மாவீரர்களின் நினைவாக நினைவுச்சுடர்களை பெற்றோர்கள்உ, றவினர்கள் ஏற்றிவைத்தார்கள்.















# அம்பலவன் பொக்கணையில்

அம்பலவன்பொக்கணை சாள்ஸ் மண்டப வளாகத்தில் மாவீரர் துயிலும் இல்லத்தில் தமிழ் தேசிய மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக நேற்று இடம் பெற்றது.

பொதுச்சுடரினை மாவீரனின் தாயார் ஒருவர் ஏற்றி வைக்க ஏனைய உறவுகளுக்கு அவர்களது உறவுகள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.







# கோடாலிக்கல்லு மாவீரர் துயிலும் இல்லத்தில்

கோடாலிக்கல்லு மாவீரர் துயிலும் இல்லத்தில் தமிழ் தேசிய மாவீரர் நாள் நேற்று உணர்வுபூர்வமாக இடம் பெற்றது.

பொதுச்சுடரினை மாவீரன் டடி அவர்களின் சகோதரி ஏற்றி வைக்க, ஏனைய உறவுகளுக்கு அவர்களது உறவுகள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.













## உத்தராகண்ட் சுரங்க விபத்து:

# கைகளால் துளையிடும் பணிகளை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை



உத்தராகண்ட் மாநிலம் உத்தரகாசியின் சில்க்யாரா சுரங்கத்தினுள் சிக்கியுள்ள 41 தொழிலாளர்களை மீட்கும் நடவடிக்கையாக செங்குத்தாக துளையிடும் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில், பக்கவாட்டிலிருந்து கைகளால் துளையிடும் பணிகள் விரைவில் தொடங்கும் என்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

சுரங்கத் தொழிலாளர்களை மீட்கும் பணிகளில் நிகழ்ந்துவரும் சமீபத்திய தகவல்கள் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர் ஓய்வு பெற்ற லெப்டினட் ஜெனரல் சைது அதா ஹஸ்னைன்,

“ரேட் ஹோல் மைனிங் எனப்படும் சிறிய அளவிலான துளையிடும் தொழிலாளர்கள் விரைவில் துளையிடும் பணியினைத் தொடங்க உள்ளனர். இடிபாடுகளில் சிக்கியிருந்த துளை யிடும் இயந்திரத்தின் துண்டுகள் ஹைதராபாத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பிளாஸ்மா கட்டரின் உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இரண்டு வாரங்களுக்கு மேலாக சுரங்கத்தினுள் சிக்கியிருக்கும் 41 தொழிலாளர்களை பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் மீட்பதில் அரசு முழு உறுதியுடன் செயல்படுகிறது. மீட்பு நடவடிக்கையில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன” என்றார்.

தொழிலாளர்களை மீட்பதில் செங்குதாகவும், பக்கவாட்டில் ஆட்கள் மூலமாக துளையிடும் இரண்டு வழிமுறைகளில் கவனம் குவிக்கப்பட்டுள்ளது. சுரங்கப் பாதை நிறைவு பெறும் பார்கோட் பகுதியில் இருந்து துளையிட்டு வரும் பிற முயற்சிகளும் செயல்பாட்டில் உள்ளன. சுரங்கத்துக்குள் சிக்கியிருக்கும் தொழிலாளர்கள் வெளியேறுவதற்கு மொத்தம் 86 மீற்றர் தூரம் செங்குத்தாக துளையிட வேண்டும். சிக்கியிருக்கும் தொழிலாளர்களிடம் சென்றடைவதற்கான இரண்டாவது வாய்ப்பாக சுரங்கத்தின் உச்சியில் இருந்து செங்குத்தாக 1.2 மீற்றர்களுக்கு குழாய் பதிக்க வேண்டும்.

இதனிடையே, பிரதமரின் முதன்மைச் செயலாளர் பி.கே. சர்மா, உள்துறைச் செயலாளர் அஜய் கே பல்லா மற்றும் உத்தராகண்ட் தலைமைச் செயலாளர் எஸ்.எஸ்.சாந்து ஆகியோர் நடந்து வரும் மீட்பு பணிகளை ஆய்வு செய்தனர்.

முன்னதாக, உத்தராகண்டில் சில்க்யாரா – பர்கோட் இடையே அமைக்கப்படும் சுரங்கப் பாதையில் கடந்த 12 ஆம் திகதி மண் சரிவு ஏற்பட்டது. இதில்,41 தொழிலாளர்கள் சுரங்கப் பாதைக்குள் சிக்கிக்கொண்டனர். அவர்களை மீட்பதற்காக, அமெரிக்க தயாரிப்பான ஆகர் இயந்திரம் மூலம் பக்கவாட்டில் துளையிடப்பட்டது. ஆனால், அந்த இயந்திரத்தின் பிளேடு, கம்பிகளில் சிக்கி உடைந்து சுரங்கப் பாதையில் சிக்கிக் கொண்டது. இதனால், அந்த இயந்திரத்தை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து, பக்கவாட்டில் துளையிடும் முயற்சி கைவிடப்பட்டது.

அதற்குப் பதிலாக, சுரங்கத்தின் மேல் பகுதியில் இருந்து செங்குத்தாக துளையிட்டு, தொழிலாளர்களை மீட்க திட்டமிடப்பட்டது. செங்குத்தாக துளையிடும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் இதில் இதுவரை 31 மீற்றர் செங்குத்து துளையிடப்பட்டுள்ளதாக மீட்புக் குழு தெரிவித்துள்ளது.

---

# சாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்த வேண்டும்!

## - முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தல்

“தாமதப்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது சாதிவாரி கணக்கெடுப்பையும் மத்திய அரசு நடத்தவேண்டும். பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு முழுமையாக முறையாக வழங்கப்படவேண்டும். பட்டியலின – பழங்குடியின மக்களுடைய இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்பட வேண்டும். சிறுபான்மையினர் இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்படவேண்டும்” என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் முன்னாள் இந்தியப் பிரதமர் வி.பி. சிங்கின் முழு திருவுருவச்சிலையை திறந்து வைத்து, சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் உரையாற்றுகையில்,



“தாமதப்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது சாதிவாரி கணக்கெடுப்பையும் மத்திய அரசு நடத்தவேண்டும். பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு முழுமையாக முறையாக வழங்கப்படவேண்டும். பட்டியலின – பழங்குடியின மக்களுடைய இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்படவேண்டும். சிறுபான் மையினர் இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்படவேண்டும். இதையெல்லாம் அகில இந்திய ரீதியில் கண்காணித்து, உறுதி செய்ய அனைத்து கட்சி எம். பிக்கள் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும்.

இதனையெல்லாம் அகில இந்திய அளவில் சமூகநீதியில் ஆர்வம் கொண்ட அனைத்து அரசியல் இயக்கங்களும் ஒற்றுமையாக இணைந்து மக்கள் நலனுக்காகச் செயல்படவேண்டும். “ என்று தெரிவித்துள்ளார்.

# பஞ்சத்தின் விளிம்பில் காசா: ஐ.நா. உணவு திட்டம் எச்சரிக்கை



போரினால் பாதிக்கப்பட்ட காசா நகரம் தற்போது பஞ்சத்தின் விளிம்பில் இருப்பதாகவும், அதனால் அங்கு இன்னும் அதிகமான உணவு, நிவாரணப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் ஐ.நா. உணவு உறுதித் திட்டத்தின் தலைவர் கிண்டி மெக்கெய்ன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது திடீர் தாக்குதலை ஹமாஸ் குழுவினர் நடத்தினர்.

முன் எப்போதும் இல்லாத அளவில் எதிர்பாரா நேரத்தில் நிகழ்ந்த அந்தப் பெரிய தாக்குதலில் 1,200 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். 200 இற்கும் மேற்பட்டோர் பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர். இதனையடுத்து இஸ்ரேல் தீவிரத் தாக்குதலைத் தொடங்கியது. இதில் குழந்தைகள் உள்பட 14 ஆயிரத்து 200 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், சர்வதேச சமூகங்களின் அழுத்தம் காரணமாக பணயக் கைதிகளாக விடுவிக்க ஏதுவாக 4 நாட்கள் போர் நிறுத்தத்தை இஸ்ரேல் – ஹமாஸ் கடைபிடித்து வருகிறது. இது வரை ஹமாஸ் 58 பணயக் கைதிகளை விடுவித்துள்ளது. நேற்று நான்காவது நாளில் இன்னும் அதிகமான பணயக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று கட்டார் மத்தியஸ்தம் செய்து வருகிறது.

இந்தச் சூழலில் போரினால் பாதிக்கப்பட்ட காசா பஞ்சத்தின் விளிம்பில் இருப்பதாக ஐ.நா. உணவு உறுதித் திட்டத்தின் தலைவர் மெக்கெய்ன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சி.பி.எஸ். செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்தப் பேட்டியில், “காசாவில் தீவிர பஞ்சம் ஏற்படும் சூழல் உள்ளது. இதனால் பேரழிவு தரும் சம்பவங்கள் நிகழும். பஞ்சம் தன்கூடவே கடுமையான நோய்களையும் கொண்டுவரும்.

ஆகையால் உடனடியாக உதவிகள் வேண்டும். இந்தப் பகுதியில் பஞ்சம் ஏற்படும் என்பதைக் கணித்ததன் அடிப்படையில் இப்போது கிடைக்கும் உதவிகள் நிச்சயமாகப் போதாது.

இந்த 4 நாட்கள் போர் நிறுத்தத்தால் ஒரு லட்சத்து 10 ஆயிரம் பேருக்கு உணவு வழங்கியுள்ளோம். இது மிகவும் குறைவானதே. பட்டினியில் உள்ள அனைவருக்கும் உணவு கொடுக்க வேண்டும் அதற்கு நாங்கள் பாதுகாப்பாக எல்லா பகுதிகளையும் அடைய வேண்டும்” என்றார்.

ஏற்கெனவே, யுனிசெப் வெளியிட்ட அறிக்கையில் காசாவில் உள்ள குழந்தைகள் மத்தியில் 30 சதவீதம் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்துள்ளதாகக் கூறப்பட்டது.

இந்த நிலையில் தற்போது தீவிர பஞ்ச அபாயம் குறித்து ஐநா உணவு உறுதித் திட்ட அமைப்பும் எச்சரித்துள்ளது. இதற்கிடையில், கடந்த 4 நாட்களில் மட்டும் காசாவுக்கு 200 வாகனங்களில் உணவு, நிவாரணப் பொருட்கள் சென்றுள்ளன என்று இஸ்ரேல் ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

# ‘காசாவின் புனரமைப்புக்கு உதவுவேன்’: இஸ்ரேல் பிரதமரிடம் எலான் மஸ்க் தெரிவிப்பு

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான மோதல் காரணமாக உருகுலைந்து போயுள்ள பாலஸ்தீனத்தின் காசா பகுதியின் புனரமைப்புக்கு உதவுவேன் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் எக்ஸ் தள உரிமையாளர் எலன் மஸ்க் தெரிவித்துள்ளார். எலான் மஸ்க் தற்போது இஸ்ரேலுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

இஸ்ரேல் – ஹமாஸ் போர் கடந்த சில நாட்களாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இருதரப்பிலும் பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

இந்தநிலையில், மேலும் சில பிணைக் கைதிகளை விடுவிக்கத் வசதியாக போர் நிறுத்தம் இன்னும் சில நாட்களுக்கு நீடிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சூழலில் காசா புனரமைப்புக்கு உதவுவேன் என மஸ்க் தெரிவித்துள்ளார்.



இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு மற்றும் மஸ்க் இடையிலான கலந்துரையாடலில் அவர் இதனை தெரிவித்துள்ளார். எக்ஸ் தளத்தில் இது நேரலையில் வெளியானது.

“காசா வாழ் மக்களுக்கு சிறந்த வாழ்க்கை வேண்டுமென்றால் ஹமாஸை முற்றிலுமாக அழிக்க வேண்டும். ஜேர்மனி மற்றும் ஜப்பானில் செய்தது போல நச்சு நிறைந்த ஆட்சியை அகற்ற வேண்டும்” என நெதன்யாகு, மஸ்க்கிடம் தெரிவித்தார். “அதை விட்டால் வேற சாய்ஸ் இல்லை” என மஸ்க் அதற்கு பதில் கொடுத்துள்ளார்.

“படுகொலை செய்யும் நோக்கில் இயங்குபவர்களையும், தீவிரவாதிகளையும் வெளியேற்றுவதில் நீங்கள் உறுதியாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் எஞ்சியுள்ள மக்களுக்கு உதவ வேண்டும். போருக்கு பின் காசா புனரமைப்புக்கு உதவுவேன்” என எலன் மஸ்க் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.11.2023




உங்களிடம் தேவையில்லாத உணர்வுகள் காணப்படும். அதை நீங்கள் தவிர்க்க வேண்டும்.உங்கள் முயற்சியில் வெற்றி பெற தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

பணிச்சுமை காணப்படும்.பணிநிமித்தமான பயணங்கள் இருக்கும்.சகபணியாளர்களுடன் மோதலை தவிர்க்கவும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல.அகந்தை உணர்வு காணப்படும்.இதனால் குடும்பத்தின் அமைதி கெடும்.

இன்று நிதி ஆதாயம் குறைந்து காணப்படும்.தேவையற்ற செலவினங்களை கண்காணியுங்கள்.இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று வளர்ச்சி குன்றி காணப்படும். பொறுமையும் உறுதியும் அவசியம். நல்லதையே எண்ணுங்கள்.

இன்று பணியைப் பொறுத்தவரை உற்சாகமான நாளாக இருக்காது. பணியிடத்தில் காணப்படும் சூழ்நிலையை அனுசரித்து நடந்து கொள்வது நல்லது.

குடும்ப அங்கத்தினர்களிடையே பிணைப்பை வலுப்படுத்த முயற்சி எடுப்பீர்கள்.உங்கள் முயற்சியை மென்மையாகக் கையாளுங்கள்.

அஜாக்கிரதை காரணமாக இன்று உங்கள் பணம் வீணாக செலவாகலாம்.உங்கள் வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியத்திற்காக இன்று நீங்கள்செலவு செய்ய நேரலாம்

பதட்டம் காரணமாக தலைவலி காணப்படும்.உங்கள் உணவுப் பழக்கத்தை கண்காணியுங்கள்.




உங்கள் முயற்சிகள்வெற்றியளிக்கவில்லையெனில் இதயம் தளர்ந்து விட வேண்டாம்.இன்று சில சௌகரியங்களை இழக்க நேரும்.

உங்கள் பொறுப்புகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முறையான நடைமுறையை பின்பற்ற வேண்டியது முக்கியம்.

உறவுமுறை உங்களுக்கு சாதகமாக இருக்காது. விவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று செலவினங்கள்அதிகமாக இருக்கும்.பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்ய வேண்டியது அவசியம்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.செரிமானக் கோளாறு காரணமாக அசௌகரியம் ஏற்படலாம்.




நீங்கள்இன்னும் அதிக முயற்சி செய்ய வேண்டும்.எந்த விஷயங்களுக்கு முதலிடம் தரவேண்டும் என்று உணர்ந்து அதற்கேற்றாற் போல நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக பணிச்சுமைகளை சந்திக்க நேரும்.எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளுங்கள். சிறந்த திட்டமிடல் வேண்டும்.

தொடர்பாடல் பிரச்சினை காரணமாக குடும்பத்தில் நல்லிணக்கம் குறையும்.குடும்ப அங்கத்தினர்களுக்காக நேரம் ஒதுக்கி அவர்களிடம் கவனம் செலுத்துவது நல்லது.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்காது. பணப் பரிவர்த்தனையின் போது கவனமாக இருக்கவும்.

ஆரோக்கியம்சுமாராக இருக்கும்.உங்கள்தோள்களில் காயங்கள் ஏற்படலாம்.




இன்று ஆற்றல் மிகுந்து காணப்படு வீர்கள்.எளிதில் வெற்றி கிடைக்காது என்பதனால் திருப்தி காணப்படாது.

பணிநிமித்தமான பயணங்கள் அதிகமாக செய்ய நேரும்.இன்று பணியில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.

உறவில் அமைதியும் நல்லிணக்கமும் குறைந்து காணப்படும்.உரையாடும் போது வார்த்தைகளில் கவனம் செலுத்தவும்.

பணத்தைப் பொறுத்த வரை இன்று அவ்வளவு சிறப்பாக இருக்காது. செலவினங்கள் அதிகமாக இருக்கும்.

தலைவலி அல்லது பல்வலி உபாதைகள் ஏற்படலாம். ஆரோக்கியமான உணவு உங்கள் ஆரோக்கியத்திற்கு நல்லது.




சில தடைகளுக்குப் பின் உங்களுக்கு நற்பலன்கள் கிடைக்கும்.செயல்களின் முன்னுரிமையை உணர்ந்து அதன்படி ஆற்றுங்கள்.

பொறுமை கடைபிடிப்பதன் மூலம் நீங்கள் வெற்றி அடையலாம்.உங்கள் சக பணியாளர்களிடம் கவனமாக இருங்கள்.அவர்கள் உங்களுக்கு பிரச்சினைகள் ஏற்படுத்தலாம்.

குடும்பத்தில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.குடும்ப அங்கத்தினர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று பணவரவுடன் செலவும் சேர்ந்து காணப்படும். சீரான நிதிநிலைமையை தக்கவைத்துக் கொள்ள திட்டமிடல் அவசியம்

ஆரோக்கியம் மிதமாக காணப்படும்.பதட்டம் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று பொறுப்புகள் அதிகமாகக் காணப்படும்.முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இன்று உகந்த நாள் அல்ல.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. ஏற்ற இறக்கங்களை காண்பீர்கள்.

உறவின் பிணைப்பு குறைந்து காணப்படுவதால் குடும்பம் பாதிக்கப்படும். உணர்ச்சி வசப்படுவதனால் ஒன்றும் பயனில்லை.உங்கள் பிரியமானவர்களுடன் நேரம் செலவழித்து அவர்களை புரிந்து கொள்ள முயலுங்கள்.

நிதிநிலைமையில் ஏற்ற இறக்கங்கள்காணப்டும். பணப்பரிவர்த்தனையில் கவனமுடன் இருக்க வேண்டும். செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

பற்களில் வலி அல்லது தலைவலி ஏற்படலாம்.உணவு முறையில் கவனம் செலுத்தவும்.




இன்று பொறுமை மிகவும் அவசியம். உங்களிடம் காணப்படும் இசைவற்ற தன்மை தடைக்கல்லாக அமையும்.

இன்று பணியில் சில இறுக்கங்கள் காணப்படும்.தைரியம் மற்றும் உறுதியின் மூலம் நீங்கள் வெற்றி காணலாம்.

குடும்ப விஷயங்களில் சூடான விவாதங்கள் நடைபெறும்.அமைதியான அணுகுமுறையை பராமரிப்பது நல்லது.

இன்று பணவரவிற்கு சிறப்பான நாளாக அமையாது. கடின உழைப்பை நீங்கள் இன்று நம்ப வேண்டியது அவசியம்.

தோல் எரிச்சல் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.11.2023




இன்று நன்மையும் தீமையும் கலந்து நடக்கும்.முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.தாமதங்களுக்கு வருந்த வேண்டாம்.

பணியல் இறுக்கமான சூழ்நிலைகளை திறமையாக கையாள கற்க வேண்டும்.இல்லையெனில் தவறுகள் நேரலாம்.பணி நிமித்தமான பயணம் சாத்தியம்.

குடும்பத்தில் பதட்டம் காணப்படும். நல்ல சூழ்நிலையை உருவாக்க நீங்கள்அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதிநிலைமை உற்சாகத்தை அளிக்கும் வகையில் இருக்காது. பணத்தைப் பொறுத்தவரை உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதை கடினமாக உணர்வீர்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




இன்று சுமாரான பலன்களே கிடைக்கும்.இன்று பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.உங்கள் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தைப் பற்றிக் கவலைப் படுவீர்கள்.

நேர்மறையான அணுகுமுறையை மேற்கொள்ளுங்கள்.பொறுப்புகளை திறமையாக கையாள்வதில் தடைகள் காணப்படும்.

உங்கள் குழந்தைகளின் மற்றும் குடும்பத்தின் வளர்ச்சி பற்றிய கவலை காணப்படும்.அதிகமாக யோசிப்பதன் மூலம் குழப்பம் தான் மிஞ்சும்.எனவே அதிகமாக யோசிக்க வேண்டாம்.

பங்கு வர்த்தகத்தின் மூலம் பணம் சம்பாதிக்க வாய்ப்பு உள்ளது.செலவு செய்வதற்கு முன் கவனமாக யோசித்து செயல்படவும்.




இன்று உறுதியும் அர்ப்பணிப்பயம் உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தரும்.இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம்.

பணியில் தவறுகளை தவிர்க்க கவனமாக பணியாற்றவும்.முயற்சியின் மூலம் உங்களுக்கு சாதகமான பலன்கைள நீங்கள் பெறலாம்.

குடும்பத்தில் சில சச்சரவுகள் காணட்டும். பக்குவமான முறையில் விஷயங்களைக் கையாள்வது மிகவும் நல்லது.

நிதிநிலைமையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.பணம் சேமிப்பதை இன்று கடினமாக இருக்கும்.

உங்கள் வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.அதற்காக நீங்கள் பணத்தை செலவு செய்ய நேரும்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள்.உங்கள்செயல்களை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று பணிச்சூழல் சாதகமாக காணப்படாது.உங்கள் கீழ்பணிவோர்களிடம்பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இன்று குடும்பத்தில் மகிழ்ச்சியை எதிர்பார்க்க இயலாது. பிரச்சினைகளுக்கு நேரம் ஒதுக்கி கவனம் செலுத்த வேண்டும்.

இன்று அதிக பணம்சேமிப்பது கடினம்.ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.

உங்கள்ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள்குடும்ப அங்கத்தினர்களின் உடல் நிலைக்காக செலவு செய்ய நேரும்.

